<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 52/2015</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **17.11.2025** |
| **பெயர்** | **கிரகலெட்சுமி** |
| **க/பெ** | **சந்திராரெட்டி** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.11.p.m**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் பழைய எண் 66/5, புதிய எண் 66/7. இதர பிரதிவாதிகளுக்காவும் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொததின் சர்வே எண்ணில் எத்தனை செண்ட் என்னிடம் உள்ளது என்றால் 24 செண்ட் விற்றது போக 12 செண்ட் என்னிடம் உள்ளது. வாதி சில ஆவணங்களை இந்த வழக்குடன் தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியுாது. வாதி ரத்தினாபாயம்மாளின் தாயார் பெயர் என்ன என்றால் கமலாம்மாள்.

2. வா.சா.ஆ 7 ஆவணமான செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அதில் சர்வே எண் 66/7 யார் பெயரில் உள்ளது என்று கேட்டதற்கு சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு கமலாம்மாள் பெயரில் உள்ளது என்று கூறினார். வா.சா.ஆ 7 ஆவணத்தை ரத்து செய்ய பிரதிவாதிகள் தரப்பில் ஏதேனும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. கூட்டுக்குடும்பமாக இருந்ததால் கமலாம்மாள் பெயரில் கொடுக்கப்பட்டது. கமலம்மாள் என் தந்தையின் அக்கா ஆவார். வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் எனது தகப்பனாரான செங்கல்பராயரெட்டிக்கு வந்தது அதன் பிறகு எனது தாயாரான மோட்சம்மாளுக்கு வந்தடைந்தது.

3. எந்த வருடம் எனது தகப்பனாருக்கு வாய்மொழி பாகம் கிடைக்கப்பெற்றது என்று தெரியுமா என்றால் தெரியாது. கமலம்மாளின் உடன் பிறந்தவர் தான் என் தந்தையான செங்கல்பராயரெட்டி என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 5ல் 30.05.1991–ல் வாதிக்கும் என் தாயாரான மோட்சம்மாளுக்கும் பாரிகத்து உறுதிமொழி கடிதம் எழுதப்பட்டடு அதில் வழக்கு சொத்து பி அட்டவணை சொத்தாக என் தாயாருக்கு ஒதுக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன பாகப்பிரிவினை பதிவு

செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

4. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பதிவு செய்யப்படதா பாகப்பிரிவினை பத்திரத்திலும் தாவா சொத்து காட்டப்படவில்லை என்றால் தெரியாது. தாவா சொத்தானது கமலம்மாளின் தனிப்பட்ட சொத்து என்ற காரணத்தினால் ஏற்கனவே அரசாங்கத்தால் வழங்கப்பட்ட எஸ்.எல்.ஆர் ஆவணத்தில் அது கமலம்மாள் பெயரில் இருந்தது மற்றும் அதனால் தான் மேற்குறிப்பிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் அந்த சர்வே எண்ணானது இடம் பெறவில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 10ல் சுப்புலட்சுமியம்மாளுக்கு வாரிசு இல்லை என்று குறிப்பிட்டது தவறு என்றால் சரியல்ல.

5. எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 11–ல், 20.01.1930 தேதியிட்ட ஈடுகட்டிய அடமானம் பத்திர எண் 99/1930 பி.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 12–ல் நான் குறிப்பிட்டுள்ள சங்கதி சரியானதா என்றால் சரியானது. பி.சா.ஆ 1ல் சுபலட்சுமியம்மாள் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அனைவரும் கூட்டாக அனுபவித்து கொண்டு வருகிறோம். சுபலட்சுமியம்மாள் வாதியின் தாயாரன கமலம்மாளின் தாயார் ஆவார். அவர் மேலும் என் தந்தையின் தாயார் ஆவார். பி.சா.ஆ1ஆவணமனாது நீதிமன்றத்தால் பி.சா.ஆ2 என 04.04.2025அன்று ஆவணம் எண் மாற்றம் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது.

6. எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 18–ல் சுப்புலட்சுமியம்மாளின் வாரிசுகளுக்குள் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினை எந்த வருடம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதனால் என் தந்தையாருக்கு ஒதுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது, ஆனால் நாங்கள் பயிர் செய்து கிஸ்து கட்டி வந்தோம். என் தாயார் பயிர் செய்து கெண்டு இருந்த காரணத்தினால் நில வரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டா எண் 400 என் தாயாரின் பெயருக்கு வழங்கப்பட்டது. தவறுதலாக உண்மையை மறைத்து என் தாயார் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 20–ல் 22.05.1991 தேதயிட்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

7. மேற்சொன்ன பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும் 01.10.1992ல் தான் வாதியை மோசடி செய்யவதற்காக ஒரு பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ 8 பாகப்பிரிவினை பத்திரம் பிற பாகஸ்தர்களை கேட்காமல் எங்களுக்கு மோசடியாக ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ 8ன் படி கிரகலெட்சுமிக்கு பாகம் ஒதுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ–9 பதிவு செய்யப்படாதா ஆவணம் என்றால் சரிதான். கமலம்மாள் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. பி.சா.ஆ 9கமலம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றும் பிற பாகஸ்ர்களின் கையெழுத்து இல்லாமல் நிறைவேற்றப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

8. பிரதிவாதிகளால் எதிரிடை பாத்தியம் கோர இயலாது என்றும் கமலம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வாதியை மோசடி செய்யும் விதமாக பாகப்பிரிவினை அடிப்படையில் கிரையம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கமலம்மாள் 1958 ல் இறந்துவிட்டார் மற்றும் அவரது கணவரும் 1981 ல் இறந்துவிட்டார் பின்னர் வாதியின் சகோதரரும் 1995ல் இறந்துவிட்டார் எனவே வழக்கு சொத்திற்கு வாதி தான் ஒரே வாரிசு என்றால் சரிதான். பிரதிவாதிகள் கோரும் வாய்மொழி பாகப்பரிவினை வழக்கு சொத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

9. வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்றும் அதை பிரதிவாதிகள் மோசடி ஆவணங்கள் ஏற்படுத்தி வாதிகளின் உரிமையை தடை செய்யலாம் என்றால் சரியல்ல. எனவே பிரதிவாதிகள் ஏற்படுத்தி கொண்ட பாகப்பிரிவினை செல்லாது என்றும் அதன் அடிப்படையில் ஏற்படுத்தி கொண்ட கிரைய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. 04.06.1991ல் பாபுரெட்டிக்கு அனுப்பப்பட்ட பி.சா.ஆ1 பொது அதிகாரப்பத்திரத்தில் ஹேமச்சந்திரரெட்டி, ரத்தினாபாய், கருணாநிதி, சந்திரா ரெட்டி, மோட்சம்மாள் பொது அதிகாரப்பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான்.

10. பி.சா.ஆ 9 எழுதப்பட்ட தேதி 30.05.1999 என்றால் சரிதான். அதனால் பி.சா.ஆ 9 நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ 9 ன்படி உண்மையிலேயே எங்களுக்கு சொத்து வந்தடைந்திருந்தால் பி.சா.ஆ 1 ஏற்படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ஆகயைால் வாதி கோரிய பரிகாரம் பெற அவருக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.59.p.m.**